# Sanga Kaalathil Pengalin Nilayum Pangalippum

**A.S. Abida**
*Ph.D Research Scholar, PG & Research Department of Tamil*
*The New College (Autonomous), Royapettai, Chennai*

**Dr. M. Jafar Sadiq Ali**
*Assistant Professor & Research Guide*
*PG & Research Department of Tamil, The New College (Autonomous)*
*Royapettai, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18358623

**Abstract**
*Sangam literature stands as a body of works that highlights the greatness and uniqueness of the Tamil language as well as the lifestyle of Tamil society. The moral values and cultural principles followed by the people of the Sangam period continue to serve as guiding models for contemporary society, leading the way toward social and human development. These literary works embody the lofty thoughts of hundreds of learned poets and possess a richness and depth of language that astonish linguists. This study extensively examines women's education, knowledge, valor, mental strength, leadership qualities, hospitality, and the virtues that women should attain in the future, as reflected during the distinguished Sangam period.*

***Keywords :*** *Sangam Literature, Femininity, Hospitality, Inner Resilience, Social Status, Intellectual Excellence*

**References**

1. Professor R. Jagadeesan, Kurinchi Publishing House, Senguttai, Katpadi, Vellore – 632 007
2. Professor Balasundaram Ilaiyathambi, Sangam Literature – A New Perspective Manimekalai Publications, T. Nagar, Chennai – 600 017
3. Dr. C. Balasubramanian, M.A., M.Litt., Ph.D., Sangam Age Women, Pari Nilayam, No.184, Prakasam Salai, Chennai – 600 108,
4. Dr. S. Geetha, Psychological Perspectives of Sangam Women, Ayya Nilayam, Nanjikkottai Road, Thanjavur – 613 006,
5. Publisher Ram. Gurumoorthy, Classical Tamil Literatures from a Classical Perspective (Volume – 2), Meiyappan Publications, No. 53, Pudhu Street, Chidambaram – 608 001
6. Editorial Committee, The Eighteen Lesser Texts (Pathinen Keezhkanakku): Text and Commentary, Saradha Publications, Chennai – 600 014
7. M. Sivasubramanian

# சங்க காலத்தில் பெண்களின் நிலையும் பங்களிப்பும்

***அ.சு. ஆபிதா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
புதுக்கல்லூரி (தன்னாட்சி), இராயப்பேட்டை, சென்னை

***முனைவர் மு. ஜாபர் சாதிக் அலி***
உதவிப் பேராசிரியர், ஆய்வு நெறியாளர்
தமிழ் முதுகலை ஆய்வுத்துறை
புதுகல்லூரி (தன்னாட்சி), சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் மொழியின் பெருமையினையும், சிறப்பினையும் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் முறையினையும் எடுத்தியம்பும் இலக்கியமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க கால மக்களின் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு நெறிமுறைகள் அனைத்தும் இன்றைய சமுதாயத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்து வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது, புலமை சார்ந்த நூற்றுக்கணக்கான புலவர்களின் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டது. மொழியியல் வல்லுநர்களை வியக்க வைக்கும் மொழி வளம் கொண்டது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்க காலத்தில் மகளிரின் கல்வி, அறிவு, வீரம், மனத்தின்மை, ஆளுமைச் சிறப்பு, விருந்தோம்பல் பண்பு, எதிர்காலத்தில் பெண்கள் பெற வேண்டிய மாண்புகள் ஆகியவற்றை விரிவாக ஆராய்கிறது.*
***திறவுச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், பெண்மை, விருந்தோம்பல், சமூக நிலை அறிவுப்புலமை*

**முன்னுரை**

சங்க காலத்தில் கலை, அரசியல், சமுதாயம், இலக்கியம், எனப் பல துறைகளிலும் நம் நாடு சிறந்து விளங்கியது. அக்காலத்தில் எல்லோராலும் பெண்கள் மதிக்கப்பட்டனர். கல்வி, கேள்விகளில் வல்லவராகத் திகழ்ந்தனர். பெண்மை போற்றப்பட்டது. பண்பு நலத்தில், இல்வாழ்க்கையில், கடமையுணர்வில், நாட்டுப்பற்றில், அரசியலறிவில் பெண்கள் சிறந்து விளங்கினர். சங்க காலப் பெண்களின் நிலைகுறித்து, வ.சுப.மாணிக்கம், 'தமிழ்க் காதல்' என்னும் தமிழ் நூலில் குறிப்பிடும்போது "பண்டையத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின் பெண்கள் கற்கும் உரிமையும், கவிபாடும் உரிமையும், காதல் உரிமையும், காதற் களவு செய்யும் உரிமையும், இல்லறத் தொழிலுரிமையும், பெருமையும், புகழும் எல்லாம், ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**பெண்களின் கல்வி மற்றும் அறிவுப் புலமை**

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்"

என்னும் பாரதியின் வரிகளுக்கு ஏற்பச் சங்க காலத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் பாடல்கள் பாடியிருப்பதை அறிய முடிகிறது. மேலும் அவர்கள் இலக்கியம், இசை, கலை ஆகிய துறைகளில் புலமை பெற்று காணப்பட்டனர், பெண்கள் வாசிப்பதிலும், எழுதுவதிலும் திறமை பெற்றிருந்தனர்.

வரலாற்றுப் பேரறிஞர் திரு.கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் தம் 'தமிழர் பண்பாடும், வரலாறும்' என்ற நூலில் "சமுதாயத்தில் பெண்களுக்கு நல்ல சுதந்திரமிருந்தது. புகழ்பெற்ற பல பெண் புலவர்கள் இருந்தார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். சங்க காலத்தில் 40-க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் வாழ்ந்துள்ளமை, அக்காலத்திற் பெண்கல்வியும் மேம்பட்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஔவையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், காவற்பெண்டு, நப்பசலையார், ஆதிமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக் குயத்தியார், பாரிமகளிர், குறமகள் இளவெயினி, காக்கை பாடினியார், பேய்மகள், இளவெயினி முதலான பெண்பாற் புலவர்களின் செய்யுள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளமை வியந்து கூறப்பட வேண்டியதாகும்.

அரசியலில் மன்னர்களுக்கு அறிவுரையும், ஆலோசனையும் கூறவும் போரில் அமைதி ஏற்பட அதியமானுக்காக, நாடு விட்டு நாடு தூது சென்றார் ஔவையார்.

**"இவ்வே பீலியணிந்து மாலை சூட்டி**
**கண்திறள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து"**

**புறம் 95**

உன்னுடைய படைக்கலங்கள் புதியதாக அழகுடன் மிளிர்கின்றன் என தொண்டைமானை புகழ்வது போல இகழ்கின்றார். ஒரு பெரும் போரை நிறுத்திய ஔவையின் அறிவாற்றலும் சந்து செய்விக்கும் திறனும், சங்க மகளிர் அரசியல் நுணுக்கங்களை அறிந்திருந்தமையை நமக்குப் புலப்படுத்துகிறது.

### மகளிரின் வீரம், மனத்தின்மை

சங்க மகளிர் வீரம் வாய்ந்த ஆண்மகனையே திருமணம் புரிய விரும்பினர். முல்லைத் திணைப் பாடல்களில் காணலாகும் "ஏறு தழுவுதல்" நிகழ்வு இதற்கு சான்றாதாரமாக அமைகின்றது.

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள்"** **கலி 103**

இதன் மூலம் வீரம் இல்லாத ஆண்மகனை மறுபிறவியில் கூட திருமணம் செய்ய மாட்டேன் என்று துணிச்சலுடன் பெண்கள் கூறியதை காண முடிகின்றது.

அச்சமின்றி தினைப்புனம் காத்த பெண்ணின் வீரம் குறிஞ்சிப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**"புலி அஞ்சு இதணம் ஏறி, அவண்,**
**சாரல் சூரல் தகை பெற வலந்த**
**தழலும், தட்டையும், குளிறும், பிறவும்**
**கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி,**
**உரவுக் கதிர் தொறூஉம் உருப்பு அவிர் அமயத்து"**

**குறிஞ்சி 41-45**

தினைப்புனம் காக்கும் பணிகளில் பெண்கள் ஈடுபட்டமையைக் கூறுமிடத்து, புலிகளும் ஏறுவதற்கு அஞ்சும் உயரமான பரண்களில் இருந்து பறவைகளை விரட்டினர் என்பது புலனாகின்றது. வீரம் பொருந்திய இம்மகளிரைத் தனிக்குடியினராக - மறக்குடியினராக உரையாசிரியர்கள் குறித்துள்ளனர். இவர்கள் "மூதின் மகளிர்" என்று குறிக்கப்பட்டுள்ளனர்.

"கொடுங்குமழை மகளிர் கோதை சூட்டி" போருக்கு ஆவர்களை அனுப்பும் மறத்தை இங்குக் காணலாம். இதன் மூலம் பெண்களின் வீரத்தையும், மனத்தின்மையையும் அறிய முடிகிறது.

### இல்லாளின் இன்றியமையாமை

தனியுரிமையோடு தற்சிந்தனை உடையவளாகப் பெண் இருந்தாள். காதலர் இருவர் கருத்தொருமித்த இல்வாழ்க்கையை நடத்தி சமுதாய மேம்பாட்டிற்கு உறுதுணையாக நின்றனர். இல்வாழ்க்கையாகிய தேருக்கு அச்சாணியாக விளங்குபவள் தலைவியே ஆவாள். "இல்லாள்" என்ற சொல் "இல்லறத்தை ஆள்பவள்" என்ற பொருளைத் தரும். எனவே தான் மகளிரை "மனைக்கு விளக்கு" என்று போற்றிப் புகழ்ந்தனர்.

**"மனைக்கு விளக்கம் மடவாள்"**

**நான்மணிக்கடிகை 105:1**

என்றும். இல்லம் பாழாவது மனையாள் இல்லாமையினால்தான் என்பதனை,

**"மனைக்குப்பாழ் வாள்நுத லின்மைதான்"**

**நான்மணிக்கடிகை 22:1**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

"உயர்ந்த நற்குணம் வாய்ந்த பெண் அவள் கணவனுக்கு முடியாக விளங்குகிறாள்" என்னும் பழமொழி விவிலிய நூலில் காணப்படுகிறது.

**"மழை திளைக்கும் மாடமாய் மாண்பமைந்த**
**காப்பாய் இழைவிளக்கு நின்றிமைப்பின்**
**என்னாம் - விழை தக்க மாண்ட**
**மனையாளை இல்லாதான் இல்லகம்**
**காண்டற் கரியதோர் காடு" நாலடி 361**

என்ற பாடலில் சிறந்த குணநலன்கள் இல்லாத பெண் உள்ள வீடு மேகங்கள் முட்டும் படியாக மாடங்களைக் கொண்டு சர விளக்குகள் பொருந்தப் பெற்றுப் பிரகாசித்தாலும் அவ்வீட்டால் எப்பயனும் இல்லை. அது ஒரு காடாகத் தெரியும் என்று கூறுவதை அறியலாம்.

தமிழ்நாடு உலகிற்கு வழங்கிய உலகச் சான்றோராம் திருவள்ளுவரும், இல்லறப் பெருமையைக் கட்டிக்காக்கும் பெண்கள் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறார்கள் என்பதை,

**"பெற்றாள் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு**
**புத்தேளிர் வாழும் உலகு" குறள் - 58**

இக்குறள் மூலம் விளக்குகிறார். இதே போல் சிறுபஞ்சமூலமும்,

**"புல்லறத்தின் நன்று மனைவாழ்க்கை"**
**சிறுபஞ்சமூம் 93-1**

என்ற வரிகளில் மனைவியோடு கூடிவாழும் இல்லற வாழ்க்கையானது புல்லிய துறவறத்தை விட மேலானது என்பதை சுட்டி காட்டியுள்ளது.

மனைவி என்பவள் ஓர் ஆடவனுக்கு தொடக்கமாகிய இளமைக் காலத்தில் தலைவியாகவும், நடுத்தர வயதில் துணைவியாகவும் முதிய பருவத்தில் உடல் நலம் பேணும் செவிலியாகவும் விளங்குகின்றாள். குடும்ப வாழ்வின் மேன்மைக்கும், மகிழ்ச்சிக்கும் ஆணி வேராக திகழ்பவர்கள் இல்லாளே என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

## கற்பு நிலையில் பெண்மை

**"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப**
**பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்"**
**திரிகடுகம் 16:1-2**

என்ற வரிகளில் உலகில் எல்லாவற்றையும் விட சிறந்த மேன்மையான புகழை பெற்றவனாக இருந்தாலும், சிறந்த கற்புடைய பெண்ணை மனைவியாகப் பெற்றவன்தான் எக்காலத்திலும் அழியாத புகழைப் பெற்றவராவார் என்னும் கருத்தை கூறியுள்ளது.

**"வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினள்"**
**கலி.2**

அருந்ததியைப் போல எல்லோராலும் தொழுது போற்றும் வண்ணம் விளங்குகின்ற பெரும் கற்பினை உடையவள் தலைவி. அந்த கற்பு எத்தகைய வலிமையுடையது எனில்,

**"அருமழை தரல் வேண்டின் தருகிற்கும்**
**பெருமையளே" கலி.39**

என கலித்தொகை இயம்புகிறது. இயற்கையைக் கூட தன் கட்டுக்குள் வைக்கும் அளவிற்கு பெண்ணின் கற்பு உயரியதாகப் பேசபட்டுள்ளது. இறைநிலையை கற்புக்கு ஈடாகப் பார்க்கும் தன்மை இங்கே வெளிப்படுகிறது.

அதுபோல் பொருளுக்கு ஆசைப்பட்டு ஒழுக்கத்தை இழக்க சங்க மகளிர் விரும்பாத உயரிய தன்மை கலித்தொகையில் காணக் கிடக்கிறது. இவ்வுலகத்தையே பரிசாகப் பெறுவதாக இருந்தாலும், மனதால் நினைத்த தலைவனை விட்டு வேறொரு மணம் புரிய நினைத்ததில்லை. அது தங்கள் குடித்தன்மையன்று என்பதை உணர்ந்திருந்தனர்.

**"விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**
**அருநெறி ஆயர் மகளிக்கு**
**இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே"**
**கலி - 114**

## விருந்தோம்பல்

தலைவியின் இல்லறக் கடமைகளில் விருந்தோம்பல் இன்றியமையாததாகக் கருதப்பட்டது.[0] இது மனையறமாகப் போற்றப்பட்டது. மனைவியர் விருப்பத்துடன் விருந்தோம்பியமையைப் புறம் கூறுகின்றது.

**"வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை"**

என்று இல்லறத்தில் விருந்தோம்பல் சிறப்பிக்கப்பட்டது. சங்க இலக்கியப் பாடல்கள்

வழி விருந்தோம்பல் பண்பாட்டை நோக்குமிடத்து, பெண்களின் உயிர் பாதுகாக்கும் தாய்மைச் சிந்தனை புலனாகிறது.

**"விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு**
**அறம் புணை ஆகத் தேற்றிப் பிறகு மலை"**

**குறிஞ்சி.206-208**

எல்லோருக்கும் உணவளித்து எஞ்சியதை உண்டு வாழும் இல்லற வாழ்க்கைச் சிறப்பினை இப்பாடல்வழி அறியமுடிகிறது.

விதைக்கு என வைத்திருக்கும் திணையைக் கூட விருந்தினருக்குக் கொடுத்து உபசரித்து மகிழும் பாங்கினை,

**"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்,**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து"**

**புறம்.333. அடி 9-12**

என்ற அடிகள் வெளிப்படுத்துகிறது. அதாவது வரகு, தினை முதலிய உணவுப் பொருட்கள் இரவலர்களுக்கு வழங்கப்பட்டதால் தீர்ந்து விட்ட காரணத்தால், விதைப்பதற்காக வைத் திருந்த விதைத் தானியங்களை உரலில் இட்டு இடித்து உணவு செய்து கொடுக்கிறாள் ஒரு இல்லத் தலைவி. இத்தகைய இல்லறச் சிறப்பை மேற்கொண்டவர்களே சங்க காலப் பெண்கள். இத்தகைய பெருமைக்குரியவர்களை, தனக்கு 'பெண் மகவு' ஆக அளிக்குமாறு இறைவனை வேண்டுவதாக அமைந்த பாடல் ஐங்குறுநூற்றில் காணப்படுகிறது. இதனை,

**"குன்றக் குறவன் கடவுள் பேண்**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்"**

**ஐங்கு.257. 1-2**

என்ற வரிகளின் மூலம் பெண்களின் சிறப்பினை சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## சங்கம் மருவிய காலம் மற்றும் நவீன கால பெண்கள்

சங்கம் மருவிய காலத்தில் சமூக கட்டுப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. பெண்களின் வாழ்க்கை பெரும்பாலும் குடும்ப வளையத்திற்குள்ளேயே சுருங்கியது. கல்வி வாய்ப்புகள் குறைந்தாலும் குடும்ப ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை காக்கும் பொறுப்பு பெண்களிடம் இருந்தது. பெண் சுதந்திரம் சங்க காலத்தை விட குறைந்தது.

இன்றைய நவீன காலத்தில் பெண்கள் கல்வி, வேலை, அறிவியல், அரசியல், போன்ற பல துறைகளில் முன்னேறி வருவது மகிழ்ச்சி அளிக்கும் செயல்பாடாகவே உள்ளது. ஆனால் பொருளாதார சுயநிலை பெற்றாலும், குடும்ப பொறுப்புகள், பாதுகாப்பு குறைவு, மன அழுத்தம் போன்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் தான் உள்ளனர். சுதந்திரம் அதிகரித்தாலும் பொறுப்புகளும் அதிகரித்துள்ளது என்பதே நிதர்சனமான உண்மை.

எதிர்கால வாழ்க்கையில் பெண்களுக்கு நிகழ வேண்டியவை, சமத்துவம், பாதுகாப்பு, மரியாதை ஆகியவற்றை பெற்று வாழக் கூடிய சூழல் உருவாக வேண்டும். கல்வியும் வேலைவாய்ப்பும் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். பெண்களின் கனவுகளும் தேர்வுகளும் மதிக்கப்படும் சமூகமே ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும்.

## முடிவுரை

சங்க காலப் பெண்கள் குடும்பம், சமூகம், காதல், வீரம் போன்ற பல தளங்களில் தங்கள் அறிவு, துணிவு, பண்பாடு ஆகியவற்றால் முக்கிய பங்களிப்பு செய்துள்ளனர். இல்லறத்திலும் சமூக வாழ்விலும் அவர்களின் நிலை மரியாதைக்குரியதாக இருந்தது. இன்றைய பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு , அரசியல், மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் தன்னம்பிக்கையுடன் முன்னேறி தங்கள் மதிப்பையும் உரிமைகளையும் உறுதியாக நிலைநாட்டி வருகின்றனர். எதிர்காலப் பெண்கள் சமத்துவம், சமூக நீதியுடன் கூடிய ஒரு வலுவான சமூகத்தை உருவாக்கும் சக்தியாக திகழ வேண்டும். கல்வி, விழிப்புணர்வு வாய்ப்புச் சமத்துவம் ஆகியவை அவர்களுக்கு உறுதியாக வழங்கப்பட்டால் பெண்களின் மதிப்பும்,

பங்களிப்பும் மேலும் உயர்ந்து சமூக முன்னேற்றதிக்கு அடித்தளமாக அமையும்.

**துணை நூற்பட்டியல்**


1. பேராசிரியர் இரா. ஜெகதீசன், சங்கத் தமிழ், குறிஞ்சி பதிப்பகம், செங்குட்டை, காட்பாடி, வேலூர்
2. பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, சங்க இலக்கியம் - ஒரு புதிய கண்ணோட்டம், மணிமேகலைப் பிரசுரம், தியாகராய நகர், சென்னை
3. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம்.லிட்., பி.எச்.டி., சங்க கால மகளிர், பாரி நிலையம், எண் 184, பிரகாசம் சாலை, சென்னை
4. முனைவர் ச. கீதா, சங்க மகளிர் உளப்பாங்கு, அய்யா நிலையம்,, நஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்
5. பதிப்பாசியர் இராம. குருமூர்த்தி, செவ்வியல் நோக்கில் செம்மொழி இலக்கியங்கள் தொகுதி - 2, மெய்யப்பன் பதிப்பகம், எண் 53, புதுத்தெரு, சிதம்பரம்
6. ஆசிரியர் குழு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை
7. எம். சிவசுப்பிரமணியன், திருக்குறள் குறளும் விளக்கவுரையும், கமெர்ஷியல் பதிப்பகம், திருத்தங்கல், சிவகாசி